நிருவாகத்திடம் இதுகுறித்து விவரம் கேட்கப்பட்டது. மாவட்ட நிருவாகம் திருநெல்வேலி மற்றும் கோயம்புத்தூர் ஆகிய இரண்டு இடங்களிலும் மற்றும் பிற மாவட்டங்களிலும் மொத்தமாக சத்துணவு ஊழியர் சங்கத்தினர் 456 நபர்கள் மட்டுமே கலந்துகொண்டுள்ளனர் என்று குறிப்பிட்டார்கள். மொத்தமாக மாநிலத்தில் 43,787 மையங்களில் 1,06,677 ஊழியர்கள் பணியாற்றுகின்றார்கள். மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (சத்துணவு) மூலமாக உண்ணாவிரதம் மேற்கொண்ட சத்துணவு ஊழியர்கள் சங்கத்தினருடன் பேச்சுவார்த்தை நடத்தி, உண்ணாவிரதத்தைக் கைவிடுமாறு அரசின் மூலமாக கேட்டுக்கொள்ளப்பட்டது. அந்த அடிப்படையில் அவர்களுடைய கோரிக்கைகள் அரசின் கவனத்தில் இருக்கின்றது. அந்தக் கோரிக்கைகளை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களின் கவனத்திற்குக் கொண்டு சென்று இந்த அரசு சிந்திக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(அ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்—தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர்கள், நீங்கள் எல்லோரும் அறிவிப்பு கொடுத்திருக்கிறீர்கள். Please sit down, Mr. Rengarajan. Please sit down, Mr. Kalaiarasu. நீங்கள் எல்லோரும் அறிவுப்பு கொடுத்திருக்கிறீர்கள். It is under my examination. Please sit down. Reply வந்தவுடன் எடுத்துக்கொள்கிறேன். இன்றைக்கு ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானம் எடுத்துக்கொண்டதுபோல, அதை எடுத்துக்கொள்கிறேன். உறுப்பினர்களுக்கு வாய்ப்புத் தருகிறேன். Please sit down. உட்காருங்கள் திரு. முருகவேல்.

3. விதி 110—ன்கீழ் அறிக்கைகள்

(அ) பவானிசாகர் குடியுரிமைப் பயிற்சி நிலையத்தை நவீன வசதிகள் கொண்டதாக மாற்றியமைத்தல் குறித்த முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை விதி 110—ன்கீழ் இரண்டு அறிக்கைகளை அளிக்க வேண்டும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அனுமதி கோரியுள்ளார்கள். அனுமதி அளிக்கப்படுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

2012 மே 7]

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு நிருவாகம் திறம்பட செயல்படும் வகையில், அரசு ஊழியர்கள் மற்றும் அதிகாரிகள் தங்கள் செயல் திறனை மேம்படுத்திக்கொள்வதிலும், அறிவுத் திறனை உயர்த்திக்கொள்வதிலும் இன்றியமையாப் பங்கினை வகிப்பவை பயிற்சி நிலையங்கள் என்று சொன்னால் அது மிகையாகாது.

இந்த அடிப்படையில், அரசு ஊழியர்களின் பணித் திறனை உயர்த்தும் வகையிலும், அலுவலக நடைமுறைகளை அவர்கள் தெரிந்துகொள்ளும் வண்ணமும், அவர்களிடையே புத்துணர்ச்சியையும், நட்புறவையும், சகோதரத்துவத்தையும், தன்னம்பிக்கையையும் ஏற்படுத்தும் வகையிலும், அரசு ஊழியர்களுக்கான அடிப்படைப் பயிற்சி, ஈரோடு மாவட்டத்தில் உள்ள பவானிசாகர் குடியுரிமைப் பயிற்சி, நிலையத்தில், அதாவது Civil Service Training Institute–இல் அளிக்கப்படுகிறது. இந்த நிலையத்தில் இளநிலை உதவியாளர்கள், உதவியாளர்கள் போன்ற அமைச்சுப் பணியாளர்களுக்கு பல்வேறு வகையான நிருவாகச் செயல்முறைகளில் அடிப்படைப் பயிற்சியும், துணை வட்டாட்சியர்களுக்குப் பணியிடைப் பயிற்சியும் அளிக்கப்படுகின்றன.

இப்படிப்பட்ட முக்கியத்துவம் வாய்ந்த இந்தப் பயிற்சி நிலையத்தில் உள்ள அரங்கம், வகுப்பறைகள், விடுதிக் கட்டடங்கள், உணவு அரங்கங்கள், பணியாளர் குடியிருப்புகள், பயிற்சியாளர் விடுதிகள், நூலகக் கட்டடம், துணை வட்டாட்சியர் தங்கும் விடுதிகள், அலுவலகக் கட்டடங்கள் ஆகிய அனைத்துமே பழுதடைந்து பயிற்சி அளிப்பதற்கு ஏதுவாக இல்லாத சூழ்நிலை உள்ளது.

அரசு ஊழியர்களுக்கான அடிப்படைப் பயிற்சியின் அவசியத்தைக் கருத்தில்கொண்டும், பவானிசாகரில் உள்ள குடியுரிமைப் பயிற்சி நிலையத்தைச் சிறந்த பயிற்சி நிலையமாக உருவாக்க வேண்டும் என்ற உன்னத நோக்கத்தைக் கருத்தில் கொண்டும், 35 கோடி ரூபாய் மதிப்பீட்டில் (மேசையைத் தட்டும் ஒலி) வகுப்பறைகள், நூலகம், உள் விளையாட்டு அரங்குகள், பதிவறைகள், ஆசிரியர்களுக்கான தனியறைகள், நிருவாக அலுவலகத்திற்கான கட்டடம், காணொலிக் கண்காட்சி அரங்கம்,

தங்கும் விடுதிகள், பணிபுரிபவர்களுக்கான குடியிருப்புகள், நவீன உணவுக் கூடம், மருத்துவ மையம், விளையாட்டு அரங்கம் உள்ளிட்ட அனைத்து வசதிகளையும் கொண்ட பயிற்சி நிலையமாக பவானிசாகர் அரசு பயிற்சி நிலையம் மாற்றியமைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

முற்பகல் 11–00

(ஆ) காவிரி கடைமடை மதகுகள், தொடர்புடைய கட்டமைப்புகளை மறு கட்டுமானம் செய்தல் மற்றும் கூடுதல் மதகுகளை அமைத்தல் குறித்த முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இவ்வுலகம் இனிதே இயங்க மழைநீர் இன்றியமையாததாக விளங்குகிறது. எனவேதான் "மாமழை போற்றுதும்; மாமழை போற்றுதும்" என இளங்கோவடிகள் சிலப்பதிகாரத்தில் கூறியுள்ளார். நீரின் அவசியத்தைக் கருதி, எனது தலைமையிலான அரசு, மழைநீர் சேகரிப்புத் திட்டத்தினைத் திறம்பட செயல்படுத்தி வருகிறது.

தற்போது, பருவநிலை மாறுதல்களினால் கடல்நீர் மட்டம் உயரும் எனவும், அதன் விளைவாக பாதிப்புகள் ஏற்படும் எனவும் அண்மைக்காலமாக உலகளவில் பல வல்லுநர்கள் கருத்து தெரிவித்து வருகின்றனர். இந்தப் பருவநிலை மாறுதல்களின் விளைவாக, இன்னும் 40 ஆண்டுகளில் காவிரி டெல்டா கடலோர மாவட்டங்களில் கடல்நீர் மட்டம் உயரும்போது, அப்பகுதிகளில் உப்புநீர் உட்புகுந்து செழிப்பான விளைநிலங்கள் பாதிப்படையும்; அல்லது ஒருசில பகுதிகளில் பாசனம் அறவே பாதிப்புக்கு உள்ளாகக் கூடும் என்றும், நிலத்தடி நீரின் தன்மையும் மாறுபட்டு நீரின் உவர்ப்புத் தன்மை அதிகரித்து எதற்கும் பயன்படுத்தப்பட முடியாத நிலை ஏற்படக்கூடிய வாய்ப்புகள் உள்ளன என்றும், மேலும், கடைமடைப் பகுதிகளில் உள்ள வடிகால்களின் வழியாகவும் கடல்நீர் உட்புகுந்து பருவமழைக் காலங்களில் வெள்ளநீர் வடிவதைத் தடுப்பதோடு மட்டுமின்றி விளைநிலங்களில் தேங்கி விவசாய உற்பத்தி பாதிக்கப்பட்டு விவசாயிகளின்